**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 462** **நாள்: 10.09.2026**

**மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.நெ.மரியவில்சன் அவர்கள், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.லோகேஷ் தமிழ்செல்வன் அவர்கள் தலைமையில், தண்டையார்பேட்டை மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று நடைபெற்றது.**

பெருநகர சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.நெ.மரியவில்சன் அவர்கள், மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.லோகேஷ் தமிழ்செல்வன் அவர்கள் தலைமையில், இன்று (10.09.2026) தண்டையார்பேட்டை மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.வி. விஜய் தாமு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் திரு.வி.சிவா, மண்டலக் கண்காணிப்பு அலுவலர் திரு.ஆர்.கண்ணன், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திருமதி ஸ்வேதா சுமன், இ.ஆ.ப., மண்டல அலுவலர் திரு.ஏ.ராஜ்குமார், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி, நீர்வளத்துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மின்சாரத்துறை, மருத்துவத்துறை உள்ளிட்ட சேவைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் பேசும்போது தெரிவித்ததாவது :**

பெரம்பூர், ஆர். கே.நகர் சட்டமன்றத் தொகுதிகள் மற்றும் இராயபுரம் சட்டமன்றத் தொகுதியின் 48ஆவது வார்டு ஆகியவற்றை உள்ளடக்கி தண்டையார்பேட்டை மண்டலம் அமைந்துள்ளது. இந்த மண்டலத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, கணேசபுரம் சுரங்கப்பாதையில் தண்ணீர் தேங்காமல் இருப்பதற்காக கணேசபுரம் பாலம் தென்பகுதியில் 2 மழைநீர் சேகரிப்பு கிணறுகள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு, அதிலிருந்து மோட்டார் பம்பின் மூலம் மழைநீர் வடிகால் வழியாக ஓட்டேரி நல்லா கால்வாயில் கொண்டு சேர்க்கப்படும். கணேசபுரம் பாலம் வடபகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, இந்தப் பகுதியில் உள்ள மழைநீரை மழைநீர் வடிகால் மூலம் பெரம்பூர் ஹைரோடு, ஏஏ சாலை, சுந்தரம் பிரதான சாலை வழியாக இரயில்வே குட்ஷெட் குளத்தில் கொண்டு சென்று பக்கிங்ஹாம் கால்வாயில் சேரும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனை விரைந்து முடித்திட வேண்டும். கணேசபுரத்தில் பாலப்பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

முல்லை நகர் பாலம் அருகிலுள்ள கேப்டன் காட்டன் கால்வாயில் மழைநீர் வடிகால் சென்று சேரும் இடங்களில் மழைநீர் தேங்காமல் இருப்பதற்காக 5 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட நீர் சேமிப்புத் தொட்டி மற்றும் தலா 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட 2 மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் என 3 மழைநீர் சேகரிப்புப் தொட்டிகள் மோட்டார் பம்புகள் வசதிகளுடன் அமைக்கப்பட்டு இப்பகுதியில் உள்ள மழைநீரினை வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பெரம்பூர் முத்தமிழ் நகரில் தேங்கும் மழைநீரினை வெளியேற்றுவதற்கு மோட்டார் பம்புகளுடன் கூடிய மழைநீர் சேகரிப்புத் தொட்டி கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இப்பகுதியில் தாழ்வான இடங்களில் தேங்கும் மழைநீரை வெளியேற்றுவதற்காக 100 எச்.பி. திறன் கொண்ட மோட்டார் பம்புகள் நிறுவப்பட்டு மழைநீரை வெளியேற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

கேப்டன் காட்டன் கால்வாய், கொடுங்கையூர் முதன்மை, வடக்கு மற்றும் தெற்கு கால்வாய்கள், லிங்க் கால்வாய், வியாசர்பாடி கால்வாய், ஜவஹர் கால்வாய் ஆகிய 7 கால்வாய்களில் மேற்கொள்ளப்படும் தூர்வாரும் பணிகள் மற்றும் கால்வாயின் தடுப்புச் சுவரினை உயர்த்திக் கட்டும் பணிகள் ஆகியவற்றை இந்த மாத இறுதிக்குள் முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் தாழ்வான பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மின் இணைப்புப் பெட்டிகளை உயர்த்தி கட்ட வேண்டும். வெளியில் தெரியக்கூடிய மின் கேபிள்களை பூமிக்கு அடியில் பதிக்க வேண்டும். சேவைத் துறைகளின் சார்பில் சாலை வெட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ள இடங்களில் சம்பந்தப்பட்ட துறைகள் பணிகளை விரைந்து முடித்து சாலை சீரமைக்கும் பணிகளை இம்மாத இறுதிக்குள் முடிக்க வேண்டும்.

மேலும், இந்த மண்டலத்தில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் மற்றும் இணைப்புப் பணிகள், வண்டல் வடிகட்டித் தொட்டிகள், மழைநீர் வடிகால்கள், கால்வாய்கள் மற்றும் இரயில்வே கால்வாய்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாருதல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளின் தற்போதைய நிலவரம் குறித்து விரிவாகக் கேட்டறிந்து பருவமழைக்கு முன்னதாக அனைத்துப் பணிகளையும் விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பருவமழையினை முன்னிட்டு, தாழ்வான பகுதிகள் மற்றும் மழைநீர் தேங்கும் இடங்களாக கண்டறியப்பட்ட இடங்களில் மழைநீரை உடனுக்குடன் வெளியேற்றும் வகையில் மோட்டார் பம்புகள் மற்றும் டிராக்டர்கள், மோட்டார் பம்புகளுடன் கூடிய நீர்த்தேக்கத் தொட்டிகள், மர அறுவை இயந்திரங்கள், வாகனங்கள் மற்றும் இயந்திரங்களை செயல்படும் வகையில் ஆய்வு மேற்கொண்டு தயார்நிலையில் வைத்திட வேண்டும். தாழ்வான பகுதிகளில் உள்ள பொதுமக்களை தங்க வைப்பதற்கான 19 நிவாரண முகாம்களைத் தயார்நிலையில் வைக்க வேண்டும். அங்கு மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்ய வேண்டும்.

தாழ்வான பகுதிகள் மற்றும் மழையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு தயாரித்து வழங்கும் 4 மைய சமையல் கூடங்களில் உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் இதர தேவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு உறுதி செய்ய வேண்டும். மேலும், மழையின் போது ஒவ்வொரு வார்டுகளிலும் உணவினை சமைத்து மக்களுக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தண்டையார்பேட்டை பகுதிகளில் பெருநகர சென்னை மாநகராட்சி, நீர்வளத்துறை, நெடுஞ்சாலைத்துறை, சென்னை குடிநீர் வாரியம், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், மின்சாரத்துறை உள்ளிட்ட சேவைத்துறைகளின் சார்பில் நடைபெறும் பணிகளை விரைந்து பொதுமக்களுக்கு இடையூறின்றி பணிகளை மேற்கொண்டு, பருவமழைக்கு முன்னதாக முடித்திட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**